துள்ளிவரும் வேலாக ஐயங்களை அள்ளிவரும் பதில்!



தலைவர் கலைஞர்

துள்ளிவரும் வேலாக ஆதாரங்களை அள்ளிவரும் பதில்!

விலை : ரூ.2/-

தலைவர் கலைஞர்

வெளியீடு

தி.மு.க. இளைஞர் அணி

"அன்பகம்" – 614, அண்ணாசாலை,

சென்னை – 18.

முதற்பதிப்பு : நவம்பர் 2004

விலை : **ரூ.2/-**

அச்சிட்டோர் : சில்வர் ஸ்ட்ரீக்,
174, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.

துள்ளிவரும் வேலாக ஆதாரங்களை அள்ளிவரும் பதில்!

வீரப்பனைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட அதிரடிப்படையில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு.விஜயகுமார் அவர்கள் நான் கொடைக்கானலில் தங்கியிருந்தபோது கடந்த அக்டோபர் திங்கள் 19ஆம் நாள் விடியற்காலையில் தொலைபேசி மூலமாக என்னைத் தொடர்பு கொண்டார். முதல் நாள் இரவு என்னை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றதாகவும், கொடைக்கானல் தொலைபேசி எண்ணை என்னுடைய செயலாளர் சண்முகநாதனிடம் கேட்டுப் பெற்றதாகவும், காலையிலேதான் தொடர்பு கொள்ள முடிந்ததாகவும் குறிப்பிட்டார். அப்போது தான் அவர் வீரப்பனும் வீரப்பனுடைய கூட்டாளிகள் மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியை என்னிடத்திலே சொன்னார். நான் அவரையும் அதிரடிப் படையினரையும் பாராட்டி விட்டு, இரு மாநில அதிரடிப் படைகளுக்கும் என் பாராட்டு என்று அவரிடம் குறிப்பிட்டேன். அதன் தொடர்ச்சியாக ஒரு அறிக்கையும் வெளியிட்டேன்.

அந்த அறிக்கையில் வீரப்பனைச் சுட்டுக் கொன்ற செயலைப் பற்றி நான் குறிப்பிடும்போது இதே வீரப்பன் தி.மு.க. ஆட்சியில் சரணடைய சம்மதித்து, அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்த சூழலில் ஒரு போலீஸ் அதிகாரியினுடைய மிரட்டலால்பின்வாங்கிக் கொண்டதையும், அதன் விளைவாகத்தான் இப்போது இந்த முடிவை வீரப்பன் சந்திக்க நேர்ந்து விட்டது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

வீரப்பனைச் சுட்டுக் கொன்றவர்களுக்கு பரிசுகள், பொற்கிழிகள், வீட்டு மனைகள் என்று முதலமைச்சர் ஜெயலலிதா வழங்குவது குறித்தோ அல்லது அதிரடிப்படை வீரர்களைப் புகழ்வது குறித்தோ தன்னுடைய ஆட்சிக்கு விளைந்த பெருமைகள் என்று கூறிக் கொள்வது குறித்தோ விமர்சனம் செய்து நான் எந்த வார்த்தையும் சொல்லவில்லை.

20 ஆண்டுகளுக்கு மேலாக அந்த வட்டாரத்தில் இருந்த அமைதியின்மை ஒரு முடிவுக்கு வந்தது என்பதில் எல்லோருமே ஆறுதல் அடையலாம் என்ற வகையிலேதான் என்னுடைய அறிக்கையும் பாராட்டு மொழியும் இருந்தது என்பதை என்னுடைய அறிக்கையைப் படித்தவர்கள் நன்கு உணர்வார்கள். ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதாவினால் சும்மாயிருக்க முடியவில்லை. என்னைப்போலவே எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் இந்த முடிவை வரவேற்று அறிக்கைகளை விட்டிருந்துங்கூட எல்லோரையும் இகழ்ந்தும் தூற்றியும் கிண்டல் செய்தும் குறிப்பாக என்னை அளவுக்குமீறி ஒவ்வொரு நாளும் தாக்கி அறிக்கைகள் விடத் தொடங்கினார். அதனுடைய உச்சகட்டமாகத்தான் அதிரடிப் படையினருக்கு அரசு சார்பில் நடத்திய விருந்து வைபவத்தில் கடந்த கால தி.மு.க. ஆட்சியைப் பற்றியும் என்னைப் பற்றியும் முதலமைச்சர் ஜெயலலிதா பேசிய இழிவான வார்த்தைகளை அவரால் அன்றைக்குப் பாராட்டப்பட்ட அதிரடிப்படையின் தலைவர்களாலேயே ஜீரணித்துக் கொள்ளமுடியாது என்பது எனக்குத் தெரியும். அரசு அதிகாரிகள் என்ற காரணத்தால் ஒரு வேளை அதனை அவர்கள் பொறுத்துக் கொண்டிருந்திருப்பார்களோ என்னவோ?

முதல் நாள் வீரப்பனை சுட்டுக் கொன்று விட்டோம் என்று எனக்குத் தகவல் கொடுத்தபோது அந்த அதிகாரி காட்டிய பெருந்தன்மையும் எனக்கு தகவலைத் தெரிவிக்க

வேண்டும் என்று கொண்டிருந்த ஆர்வமும் உண்மைதானா அல்லது ஒரு நாடகமா என்று எனக்கே சந்தேகம் ஏற்படுகின்ற அளவுக்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிக்கைகளும் அந்த அறிக்கைகளில் என்னைப் பற்றி வாரி இறைக்கப்பட்ட தரக்குறைவான வார்த்தைகளும் அமைந்தன என்பதை அந்த அறிக்கையைப் படித்த நடுநிலையாளர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

வீண் வம்பு வளர்ப்பதைப்போல கழக ஆட்சியின் மீது ஜெயலலிதா காய்ந்து விழுந்த காரணத்தினால் தான் நான் எனது அறிக்கையில் விருது வழங்கிய விழாவிலே அவர் பேசியது "தலை வீக்கம் அதிகமாகிவிட்டது" என்பதைத்தான் காட்டுகிறது என்று குறிப்பிட்டிருந்தேன். தலை அதிகமாக வீங்குவது நல்லதல்ல என்பதற்கொப்பத்தான் அவருடைய இன்றைய (2–11–2004) அறிக்கை காணப்படுகிறது. அந்த அறிக்கையில் வீரப்பனால் தெரிவிக்கப்பட்ட ஒரு நிபந்தனைகூட தனது அரசால் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என்பதுதான் உண்மை என்று ஜெயலலிதாகுறிப்பிட்டிருக்கிறார்.

இப்படியொரு அறிக்கை விடுவதற்கு முன்பு தன்னிடம் உள்ள பொறுப்பான சில அதிகாரிகளை அழைத்து இப்படியெல்லாம் தி.மு.க. தலைவர் எழுதியிருக்கிறாரே; எந்த அடிப்படையிலே எழுதியிருக்கிறார், அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டுவிட்டு, அதற்குப் பிறகாவது பதில் தந்திருக்கலாம் அல்லவா?

ஜெயலலிதா அரசின் சார்பில் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள்

ஜெயலலிதா தனது அறிக்கையில் வீரப்பனின் ஒரு நிபந்தனைகூட தனது அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று கூறி விட்டு, அதே அறிக்கையின் பின் பகுதியில்

வீரப்பனின் அறிக்கையில் ஒன்றைக் கூட அவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்று எழுதியிருக்கிறார். ஒருவேளை ஜெயலலிதா ஆட்சியின் மாவட்ட ஆட்சித் தலைவரும், தலைமைச் செயலாளரும் ஏற்றுக் கொண்டு அறிவித்த நிபந்தனைகளைத்தான், தான் ஏற்றுக் கொள்ள வில்லை என்று கூறுகிறாரோ என்னவோ? தலைமைச் செயலாளரும், மாவட்ட ஆட்சியரும் ஜெயலலிதா அரசின் சார்பில் ஏற்றுக் கொண்டு அறிவித்த நிபந்தனைகள்தான் இவை. இதை நான் 2000ஆம் ஆண்டே சட்டப் பேரவையில் பேசி அனைத்து ஏடுகளிலும் பிரசுரமாகி, தனி புத்தகமாகவும் வெளிவந்துள்ளது. உண்மையிலேயே என்னுடைய இந்தக் கூற்று தவறு என்றால் ஜெயலலிதா இதுவரை ஏன் மறுக்கவில்லை?

ஜெயலலிதாவின் தவறான தகவலுக்கு மேலும் சில ஆதாரங்கள்

மேலும் ஜெயலலிதா தனது அறிக்கையிலே அந்தக் கால கட்டத்தில் அந்தப் பகுதியிலிருந்து அதிரடி போலீஸ் வாபஸ் பெறப்படவில்லை என்றும் வீரப்பனைத் தேடும் பணி கை விடப்படவில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அதுவும் தவறான தகவல் என்பதற்கு இதோ மேலும் சில ஆதாரங்கள் :–

"எந்த நடவடிக்கையிலும் அதிரடிப்படையினர் ஈடுபடமாட்டார்கள்" (மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை) (தினமணி (5–12–1994) முதல் பக்கம்)

"கடத்தப்பட்ட சிதம்பரநாதன் உட்பட மூன்று பேரை உயிரோடு மீட்க வேண்டுமென்பதால் உடனடியாக எந்தவிதமான அதிரடி நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என தீர்மானித்திருப்பதாக போலீஸ் டி.ஜி.பி. ஸ்ரீபால் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவ்வப்போது முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தகவல் அனுப்பப்படுவதாகவும் அவர் கூறினார். வீரப்பன் விதித்த ஐந்து நிபந்தனைகளில் அதிரடிப்படை வாபஸ் பெறப்பட வேண்டும் என்பது ஒன்றாகும். இதன்படி காந்தவயல், உளியூர் எல்லை ஆகிய பகுதிகளில் எல்லை அதிரடிப் படையினர் வாபஸ் பெறப்பட்டார்கள். (மாலைமுரசு (6–12–1994) முதல் பக்கம்)

"வீரப்பனிடமிருந்து எனக்கு செய்தி வந்துள்ளது. அதில் கேட்டுள்ளபடி வீரப்பனின் பிரதிநிதி மாவட்ட ஆட்சியரைச் சந்திக்கலாம், அவருக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது. மேலும் பிணைக் கைதிகளுக்கும் வீரப்பனைச் சார்ந்தவர்களுக்கும் உணவுப் பொருள் கொண்டு செல்ல தடையேதும் இருக்காது என்று தெரிவிக்கிறோம்" (மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை) (தினமணி(7–12–1994) முதல் பக்கம்)

"அதிரடிப்படையை பின் வாங்கச் செய்வதுதான் வீரப்பனின் முதல் நிபந்தனை. அந்த நிபந்தனை ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதிரடிப்படை பின் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டன என்று போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது" (தினமணி (7–12–1994) முதல் பக்கம்)

"சந்தனக் கடத்தல் வீரப்பன் மனைவி முத்துலட்சுமி உட்பட மொத்தம் 10 பேரை பேபி வீரப்பன் வெள்ளியன்று சந்தித்துப் பேசியதாகக் கோவை மாவட்ட ஆட்சியர் ச.வி. சங்கர் கூறினார். கோவையில் செய்தியாளர்களிடம் சனியன்று பேசிய அவர், சுமார் 500 கி.மீ. பயணம் செய்து வீரப்பனின் ஆட்களைப் பேபி வீரப்பன் சந்தித்ததாகவும் சொன்னார். (தினமணி (11–12–1994) பக்கம் 7)

"நிச்சயமாக அதிரடிப்படை காட்டுக்குள் செல்லாது. வீரப்பனின் நிபந்தனை அதிரடிப்படை காட்டுக்குள் வரக் கூடாது என்பதுதான். அதனால் யாரும் காட்டுக்குள் போகமாட்டார்கள்" – கோவை மாவட்ட ஆட்சித் தலைவர். (தினமணி (12–12–1994) முதல் பக்கம்)

"போலீசாரால் தனது குடும்பத்துக்கு நேர்ந்த துன்பங்களை செய்தியாளர்களிடம் கூறிய வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் மிகவும் ஆத்திரத்தோடு என் தலைக்கு ரூ.20 லட்சம் நிர்ணயித் தார்களே, இப்போது வெளிப்படையாக திரிகிறேன், எங்கே என்னை பிடிப்பவர்கள் என்றார். தேவாரத்தை தோற்கடித்து விட்டோம், இப்போது வெளியே வந்துள்ளோம், தேவாரம் என்ன செய்ய முடியும்" என்று கேட்டார். (தினமணி (13–12–1994) முதல் பக்கம்)

"சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனின் பத்து அம்சக் கோரிக்கைகளுக்கு தமிழக அரசின் பதிலை வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் மூலம் கொடுத்து அனுப்பத் திட்டமிட்டுள்ளோம் என்று தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர் நிருபர்களிடம் தெரிவித்தார். பொது மன்னிப்பு அளிக்க வேண்டும் என்று வீரப்பன் கோரியுள்ளார். சட்டத்திலிருந்து யாரும் தப்ப முடியாது. பூலன்தேவி, மான்சிங் போன்றவர்கள் சிறை தண்டனை அனுபவித்தனர். டி.எஸ்.பி. சிதம்பரநாதன் உள்ளிட்ட மூவரின் உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால் நாங்கள் பிரச்சினையை மிகவும் கவனமாக பரிசீலிக்கிறோம். பிணைக் கைதிகளாக உள்ள அவர்களை உயிருடன் மீட்க முயற்சி எடுத்து வருகிறோம்." (தினமணி (15–12–1994) முதல் பக்கம்).

1994– டிசம்பர் திங்கள்
ஏடுகளில் மேலும் பல சான்றுகள்

1994ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஏடுகளை எடுத்துப் பார்த்தால் ஜெயலலிதா ஆட்சியில் எந்த அளவிற்கு வீரப்பனுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது என்பதற்கான மேலும் பல சான்றுகளைக் கண்டிட முடியும். அதையெல்லாம் மறந்துவிட்டு ஜெயலலிதா வீரப்பன் விதித்த நிபந்தனைகளில் ஒன்றைக் கூட தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறியிருக்கிறார். இத்தனை ஆதாரங்களையும் அவர் எப்படி மறுக்கிறார், அதற்கு என்ன ஆதாரம் காட்டுகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். இந்த இரண்டு அறிக்கைகளையும் படித்த தமிழ்நாட்டு மக்கள் யாருடைய அறிக்கையிலே புழு நெளிகிறது, நச்சுப் பாம்புகள் நெளிகின்றன என்பதை தாங்களே புரிந்து கொள்வார்கள்.

ஜெயலலிதா மேலும் தனது அறிக்கையில் “எனது உத்தரவின்பேரில் திரு. வால்டர் தேவாரம், திரு. சஞ்சய் அரோரா ஆகிய காவல் துறை அதிகாரிகள் தலைமையில் தாக்குதல் நடத்தி வீரப்பன் பிடித்து வைத்திருந்த மூன்று பேரை மீட்டது” என்றும் சொல்லியிருக்கிறார். இதுகுறித்து நான் என் கருத்தைக் கூற விரும்புவதை விட, 31–12–1994 தேதியிட்ட “தினமணி” நாளிதழில் வெளிவந்த செய்தியை அப்படியே குறிப்பிடுகிறேன்.

“வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்ட டி.எஸ்.பி. சிதம்பரநாதன் உள்ளிட்ட 3 பேரையும் அதிரடிப் படையினர் மீட்டதாகப் பொதுவாகப் போலீசார் கூறுகின்றனர். ஆனால் அந்த மூவரும் தாங்களாகவே தப்பி வந்தார்கள் என்று போலீசாரில் ஒரு தரப்பினர் தெரிவித்தனர்.

அதிகாரிகள் தங்களுக்கு பெருமை வரவேண்டும் என்று பொய் சொல்கிறார்கள். கடத்தப்பட்ட மூவரும் தாங்களாகவேதான் தப்பி வந்தார்கள்.

வீரப்பனைத் தேடி வந்த போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அப்போது டி.எஸ்.பி. சிதம்பர நாதனுடன் வீரப்பன் இல்லை. வீரப்பனின் ஆட்கள் இருந்தார்கள். துப்பாக்கிச் சூடு நடந்த போது வீரப்பன் அங்கிருந்தால் டி.எஸ்.பி.யையும் மற்ற இருவரையும் சுட்டுத் தள்ளியிருப்பார். நல்லவேளையாக வீரப்பன் அப்போது அங்கே இல்லை. எனவே போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்திய உடனே வீரப்பனின் ஆட்கள் தப்பியோடினர். டி.எஸ்.பி., உள்ளிட்ட மூவரும், வீரப்பனின் ஆட்களில் மூவரும் வேறு திசையில் ஓடினர். அவர்களிடம் உங்களுக்குத்தான் கோரிக்கை இருக்கிறதே, நீங்கள் சரண் அடைந்து விடுங்கள் என்று வீரப்பனின் ஆட்களிடம் டி.எஸ்.பி. சொன்னார். அவர்களும் அதை ஏற்றனர். இதை அடுத்து இந்த ஆறு பேரும் சிறுமுகைக்கும், லிங்காபுரத்துக்கும் இடையில் உள்ள ரேணுகா ராஜ் என்பவரின் வீட்டுக்கு வெள்ளி அதிகாலை மூன்றரை மணி அளவில் வந்து சேர்ந்தார்கள். அந்த வீட்டிலிருந்து டி.எஸ்.பி. சிதம்பரநாதன் ஆட்சியருக்குப் போன் செய்தார். உடனே அந்த இடத்துக்கு ஆட்சியர் வண்டி அனுப்பி வைத்தார். அப்போது போலீசார் யாரும் உடன் வரவில்லை. இவ்வாறு போலீசாரின் ஒரு பிரிவினர் கூறினார்கள்''.

இது முழுவதுமே "தினமணி" 31-12-1994 அன்று வெளியிட்ட செய்தி. ஆனால் ஜெயலலிதா அரசு தாங்கள்தான் அவர்களை மீட்டதாக இன்றளவும் சொல்லி வருகிறார்கள்.

தன்னைத்தானே
பாராட்டிக்கொள்கிற வியாதி

அடுத்து ஜெயலலிதா தனது அறிக்கையில் அவருக்கு மாவீரன் நெப்போலியனை விட அபரிமித நினைவாற்றல் உண்டு என்றும் அதனால் மத்திய அமைச்சருடன் நடைபெற்ற உரையாடலை தன்னால் ஞாபகத்திலே கொள்ள முடிந்தது என்றும் கூறியிருக்கிறார். ஜெயலலிதா பதவியிலே இருக்கின்ற காரணத்தினால் அவருடன் பழகுபவர்கள் அவரை துதிபாடி, துதிபாடி அதைக் கேட்டுக் கேட்டு இப்போதெல்லாம் அவருக்கு தன்னைத்தானே பாராட்டிக் கொள்கின்ற ஒரு வியாதி வந்து விட்டது போலும். அவருக்குள்ள நினைவாற்றல் குறித்து மற்றவர்கள் கூற வேண்டுமே தவிர, அவரே தனக்குத்தானே நெப்போலியனைவிட அபரிமித நினைவாற்றல் உண்டு என்றும், அது தனக்குக் கிடைத்த கொடை என்றும் பாராட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து இவருக்கு என்ன ஆகிவிட்டது என்றுதான் நினைக்கத் தோன்றுகின்றது.

அதையும் ஏற்றுக் கொள்வோம், இவர்தான் அபரிமிதமான நினைவாற்றல் உடையவர் ஆயிற்றே, தமிழகச் சட்டமன்ற பொதுத் தேர்தல்நேரத்தில் தான் கலந்து கொண்ட ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரே பேச்சினை தொடர்ந்து வரிக்கு வரி படித்தாரே தவிர, அவருக்குள்ள அபரிமித நினைவாற்றல் காரணமாக ஏன் தன்னிச்சையாகப் பேசிட இயலவில்லை ? அப்போது ஞாபக மறதி வந்துவிட்டதா? அதுமாத்திரமல்ல, இவர்தான் தன்னைத்தானே பாராட்டிக் கொள்கிற அளவுக்கு ஞாபக சக்தி கொண்டவராயிற்றே, ஜெயலலிதாவைக் குற்றஞ்சாட்டிய அத்தனை எதிர்க்கட்சிகளும் டேப் எடுத்தது பற்றி குற்றஞ்சாட்டினார்களே, அதற்கு அவர் விடுத்த முதல்நாள் பதில் அறிக்கையிலே ஒரு வரி கூட குறிப்பிட்டு

நான் டேப் எடுக்கவில்லை என்று ஏன் கூறவில்லை? முதல் நாள் பதிலில் அதைப்பற்றியே சொல்லாமல் விட்டு விட்டு, அடுத்த நாள் அறிக்கையிலேதானே தான் டேப் செய்யவில்லை என்று மறுத்தார்.

நெப்போலியனைவிட நினைவாற்றல் உள்ளவருக்கு எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டு மறந்ததேன்

நெப்போலியனை விட அற்புதமான நினைவாற்றல் உள்ளவருக்கு முதல்நாள் அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் சாட்டிய குற்றச்சாட்டு எப்படி மறந்து போனது? தமிழக சட்டப் பேரவையில் இந்த அபார நினைவாற்றல் உள்ள அம்மையார் நானும் மனுஷிதானே, தவறு செய்து விட்டேன் என்று கூறியதும் நம் நினைவுக்கு வருகிறது. நெப்போலியனை மிஞ்சும் ஞாபக சக்திக்கு அடையாளம்தானே பி.பி.சி.யின் நிருபர் கரன் தாப்பர் அவர்கள்; இந்த அம்மையார் பேட்டியின் போதுகூட படிக்கத்தான் செய்கிறார் என்பதை வெளிப்படுத்திய நிகழ்ச்சியும் என்பதை எல்லோரும் அறிந்தே இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, இவ்வளவு ஞாபக சக்தி உள்ள அம்மையார் எம்.ஜி.ஆர். பற்றி இவர் ராஜிவ் காந்திக்கு தன் கைப்பட ஆங்கிலத்திலே எழுதிய கடிதம் குறித்து பலமுறை ஆதாரத்துடன் கேள்வி எழுப்பி அதற்கு என்ன பதில் என்று கேட்டும், அதிலே மாத்திரம் அவருக்கு நினைவு ஏன்தான் தப்பி விடுகிறது?

அனைத்தையும் பொய்களாகவே கூறிவிட்டு பொய்யர்களுக்கு போட்டி வைத்தால் கருணாநிதியை எவராலும் வெல்ல முடியாது என்று வீண் ஜம்பம் வேறு காட்டியிருக்கிறார். இந்த நீண்ட அறிக்கையைப் படிப்பவர்கள், நடுநிலையாளர்கள் உண்மை என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

நன்றி : 'முரசொலி', 3.11.2004.

ARASU ARTS

வெளியீடு

தி.மு.க. இளைஞர் அணி

"அன்பகம்" – 614, அண்ணாசாலை,

சென்னை – 18.